**தலைப்பு 160 – மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 160 – மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 14 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 65,546.94 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றுள் ரூபா 42,315.00 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 23,231.94 மில்லியன் அதாவது 35.44 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 3,775.65 | 3,757.92 | 17.73 | 0.47 |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனம் | 61,771.29 | 38,557.08 | 23,214.21 | 37.58 |
| மொத்தம் | 65,546.94 | 42,315.00 | 23,231.94 | 35.44 |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 16001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 12.00 | 11.94 | 5.50 | 9.11 | 48.00 | 35.11 |

### 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 7002/0000/00/0323/0016/000 கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 260,361 ஆக இருந்தது.

### 2.4 கணக்காய்வு அவதானிப்பு

மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் மேலும் மூன்று பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை |
| (ஈ) | பொருள் இருப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454 | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை |

**3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின்போது சமர்ப்பிக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காதிருந்ததுடன் அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 755,122,397 ஆகும்.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 8,085.50 மில்லியன் தொகையான மொத்தத் நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 13 மூலதன செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 42.79 சதவீதம் முதல் 97.63 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் செலவின விடயங்களுக்காக பெறப்பட்டிருந்த ரூபா 43.00 மில்லியன் நிதிஏற்பாடு பெறப்பட்டு அந்த மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே 04 செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் கூட்டுமொத்தமாக ரூபா 15.39 மில்லியன் நிதிஏற்பாடு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு குறைநிரப்பு ஒதுக்கீட்டின் மூலம் பெறப்பட்ட நிதிஏற்பாட்டில் 28 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையிலான வீச்சிலான அளவில் அந்த நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த பெறுகைகள் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று விரிவாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சிற்கச் சொந்தமான ரூபா 19,900,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று முறையான பிரகாரம் கையளிக்கப்படாமல் மின்வலு மற்றும் புதுப்பிப்பதக்க சக்தி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

### 3.6 நிதிஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டமை

09 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பை மிகைத்து ரூபா 2,657,679 தெகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டின் போது 04 செலவின விடயங்களுக்கு நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செலவின விடயங்களில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,391,233 தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### 3.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 304,200 | பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட செயல்நிமித்த உபகட்டு நிதி உரிய முற்பணம் பணிகள் நிறைவு பெற்றதன் பின்னர் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் கையில் வைத்திருந்ததன் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(4) | 1,261,184 | 74 சந்தர்ப்பங்களின் போது தேவைகளை விஞ்சி உத்தியோகத்தர்களுக்கு உபகட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது. |

## 3.8 வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் 21 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. அந்த செயற்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 30,345.99 மில்லியனாக இருந்தது. அந்த செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 18,746.43 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த வெளிநாட்டுதவி செயற்திட்டம் தொடர்பாக கீழே மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சுற்றாடல் என உணரப்படக்கூடிய நிலப் பிரதேங்களில் உயிரியல் பலவகைப்படுத்தல் பாதுகாப்பை மேம்படுத்துதலும் சுற்றாடல் முறைமைச் சேவைகளைப் பராமரிக்கும் செயற்திட்டமும்

மேற்கூறப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்காக நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.

- ❖ காட்டு யானைகள் முகாமைத்துவக் கொள்கை தந்திரோபாய வழிகள் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தைத் திருத்துதல்
- ❖ திட்டமிடல்களை அமுல்படுத்திச் செல்வதற்குரிய இயலளவு அபிவிருத்தி
- ❖ எல்லை வரையறுக்கப்படாத காடுகளின் எல்லையை வரையறுத்தல்.
- ❖ கஹல்ல பள்ளேகெலே முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்தல்

(ii) 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் ரூபா 1.34 மில்லியன் தொகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படாமல் ரூபா 1,003,016 தொகையான அலுவலக உபகரணங்களும் இயந்திர உபகரணங்களும் 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) புதிய ஆக்கிரமிப்பு உயிரினங்கள் உள்வருதல் மற்றும் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான இயலளவு மேம்படுத்தல் செயற்திட்டம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இற்கு முரணாக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக முற்பணம் செலுத்தும் போது பதவிநிலைத் தரமற்ற உத்தியோகத்தர்களுக்கும் செயற்திட்டத்தின் வெளி உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 2,105,925 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2016 ஒக்தோபர் 22 ஆந் திகதி முதல் 2016 நம்பர் 01 ஆந் திகதி வரை தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற புதிய ஆக்கிரமிப்பு உயிரினங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான கல்விச்

சுற்றுலாவிற்காக 04 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். செயற்திட்ட பதவியணிக்குரித்தற்ற இரண்டு உத்தியோகத்தர்களும் அந்தப் பயிற்சிக்காக பங்குபற்றியிருந்தனர். அந்த உத்தியோகத்தர்களுக்கு அமையப்படியாக ரூபா 85,404 தொகையும் உஷ்ண ஆடைப் படியாக ரூபா 27,079 தொகையும் செயற்திட்டத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(iii) 2016 மார்ச் 28 ஆந் திகதி முதல் ஏப்ரல் 02 ஆந் திகதி வரை "இலங்கை வன ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட இலங்கையில் புதிய ஆக்கிரமிப்பு தாவரங்களைக் கட்டப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவத்திற்கான செயலமர்வு" இற்காக அந்த நிறுவனம் கொள்வனவு செய்த ரூபா 112,500 தொகையான மல்டி மீடியா புரொஜெக்டர் இயந்திரத்தின் பெறுமதியும் உள்ளடங்கியிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 14 விடயங்களின் கீழ் ரூபா 831,809 செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 91,499 தொகையான பெறுமதிசேர் வரித் தொகையையும் உள்ளடக்கி மொத்தச் செலவினம் ரூபா 923,308 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) இலங்கையின் மஹாவலி கங்கை ஓடுகின்ற பிரதேசத்தை அண்மித்த விவசாய குடியிருப்புகளில் விவசாய சமூகத்திற்கு காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் பாதகமான தாக்கங்களுக்கு ஈடுகொடுக்கச் செய்யும் செயற்திட்டம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிரான்ஸில் நடைபெற்ற "Smart City Selection" நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்கு செயற்திட்டப் பணிப்பாளர் வெளிநாடு சென்றிருந்தார். உரிய அனுசரணை நிறுவனத்தால் ஏற்கப்படுகின்ற செலவினங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தாமல் இணைந்த படி மற்றும் அமையப் படியாக ரூபா 506,904 (யூஎஸ் டொலர் 3,420) தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதம் செலுத்த முடியுமான போதிலும், அதற்கு முரணாக மெதிரிகிரிய, லங்காபுற மற்றும் வலப்பனை பிரதேசங்களின் விவசாயிகளுக்காக விவசாய உபகரணங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக அரசாங்க கூட்டுத்தாபனத்திலிருந்து வெட்டுக்கத்தி, கத்தி மற்றும் அலவாங்கு என்பவற்றில் 10,000 வீதம் கொள்வனவு செய்வதற்கு மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் 60 சதவீதமான ரூபா 12,030,000 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஓசோன் செயற்திட்டம்

---------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதாகிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்ட பதவியணிக்காக அமைச்சில் சேவையாற்றுகின்ற பதவியணியிலிருந்து ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள வேண்டுமென முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. 2013 நவம்பர் 12 ஆந் திகதிய Coordinating committee meeting இல் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் செயற்திட்டத்தின் இணைப்பு உத்தியோகத்தர் (Coordinator Officer) மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical Officer) என்ற 02 பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் வெளியிலிருந்து இரண்டு உத்தியோகத்தர்கள் முழுச் சம்பளமும் செலுத்தும் அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ii) 2016 ஏப்ரல் 04 ஆந் திகதி முதல் 08 ஆந் திகதி வரை சுவிற்சர்லாந்தில் ஜெனீவா நகரத்தில் நடைபெற்ற "37th Meeting of the Open-ended Working Group of the parties to the Montreal Protocol" மாநாட்டிற்காக ஓசோன் செயற்திட்டத்தின் பணிப்பாளருக்காக மாத்திரம் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், அதற்காக அமைச்சின் மேலதிக செயலாளர் பங்குபற்றியமையின் காரணமாக ரூபா 707,511 தொகையான அமையப்படி, இணைந்தபடி மற்றும் விமானப் பயணச் சீட்டுக்களுக்காக செயற்திட்டத்தால் செலவிடப்பட்டிருந்தது.

(iii) 2016 யூலை 15 ஆந் திகதி முதல் 23 ஆந் திகதி வரை ஒஸ்ட்ரியாவில் வியானா நகரத்தில் நடைபெற்ற தரவு மாநாட்டிற்காக ஒரு உத்தியோகத்தருக்காக மாத்திரம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் செலவிடப்படுதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியமையின் காரணமாக ஒரு உத்தியோகத்தருக்காக அமையச் செலவினம், இணைந்த படிகள் மற்றும் விமானப் பயணச்சீட்டுக்களுக்காக ரூபா 885,658 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(vi) மொன்றியல் அமைப்பின் உறுப்பினர்களின் மூன்றாம் அதிவிஷேட கூட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக கௌரவ பிரதி அமைச்சர் பங்குபற்றியிருந்தார். விமானப் பயணச் சீட்டுக்களின் கட்டணம் ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தினால் செலவிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், விமானப் பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சினால் ரூபா 278,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(உ) உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டம்

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், மொத்தச் செலவினம் ரூபா 49,736.39 மில்லியனாக இருந்தது. செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் திடீரென ஏற்பட்ட நீர்க்கசிவு என்பவற்றின் காரணமாக, பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகிய மக்களுக்காக உள்நாட்டு நிதியத்திலிருந்து ரூபா 901.30 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் காரணமாக அந்த பிரதேசங்களின் மக்களுக்கு அவர்களின் வீடுகள், காணிகள் ஏனைய ஆதனங்கள் மற்றும் குடிப்பதற்கு பெறப்படுகின்ற நீர் தொடர்பாக கணிசமான கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. 2017 யூலை 14 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருந்த இழப்பீடு தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விபரம் | தொகை |
| --- | --- |
| | ரூபா |
| குடியமர்த்துவதற்காக செலுத்தப்பட்ட இழப்பீடு | 7,698,500 |
| உரித்தற்றுப்போன வீடுகள் மற்றும் காணிகளுக்கான இழப்பீடு | 868,498,057 |
| மாற்று வாழ்வாதாரம், பயிர்ச்சேதம், பொருட்களின் போக்குவரத்து, படிகள் மற்றும் ஏனைய இழப்பீடுகள் | 25,105,237 |
| மொத்தம் | 901,301,794 |

## 3.9 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 92 | 37 | 55 |
| (ii) | மூன்றாம் நிலை | 36 | 35 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 200 | 153 | 47 |
| (iv) | ஆரம்ப நிலை | 102 | 84 | 18 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 02 | 02 | - |
| | மொத்தம் | 432 | 311 | 121 |